முற்பகல் 10-25

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்பேட்டை எந்த ஆண்டு தொடங்கப்பட்டது? எத்தனை தொழிற்கூடங்கள் இதில் அமைக்கப்பட்டிருக்கின்றன? இதுவரை அரசு நிறுவனங்களுக்கோ அல்லது தனிப்பட்ட யாருக்காவது அவை ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா? சமீபத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த விவசாயம் சார்ந்த தொழில்கள் 50 சதவீதத்திற்கு, குறைந்த முதலீட்டில், அமைக்க முன்வருவோர்க்கு அதை ஒதுக்கீடு செய்ய அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை, மானாமதுரை வழித்தடத்தில், சிவகங்கை மாவட்டத்தில் திருங்காகோட்டை என்னும் இடத்தில் 1995 ஆம் வருடம் 21.85 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கப்பட்டது. அதில் 5 தொழிற்கூடங்கள் கட்டப்பட்டன. ஆனால் இதுவரை ஆர்வமுள்ள தொழில் முனைவோர் யாரும் முன்வராத காரணத்தால் அவை காலியாக உள்ளன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால் தொழிற்கூடங்கள் வாடகை/தவணை முறை/மொத்த விற்பனை முறையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 348, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

348—

புதிய தொழிற்பேட்டை

***8244—திரு பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமுல்லைவாயிலில் அமைக்கப்படவிருக்கும் புதிய தொழிற்பேட்டை மூலம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்?

(ஆ) அதன் விவரம் என்ன?

2003 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆரம்பகட்டமாக நேரடியாக சுமார் 5,000 நபர்களுக்கும், மறைமுகமாக 15,000 நபர்களுக்கும் வேலைவாய்ப்புகள் கிடைக்கும்.

(ஆ) திருமுல்லைவாயில் தொழிற்பேட்டையில், சிட்கோ முதற்கட்டமாக பெண்களுக்கான தொழிற்பேட்டையை 218.46 ஏக்கர் நிலத்தில் ரூ. 610 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேம்பாட்டுப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இதில் 356 பெரிய மனைகளாகவும், 194 மனைகள் குறுந்தொழில் முனைவோருக்காகவும் பிரிக்கப்படவுள்ளன. மேம்பாட்டுப் பணிகள் முடிவடைந்து, மனைகளாகப் பிரிக்கப்பட்ட பின்னர் தொழில் முனைவோரிடமிருந்து முறையான விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒதுக்கீடு செய்யப்படும்.

திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெண்களுக்கு முதலிடம் கொடுத்து, பெண்களுக்காக ஒரு தொழிற்பேட்டை அமைக்க உத்தரவிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தத் தொழிற்பேட்டையின் ஆரம்பகட்டப் பணிகள் எப்போது முடிவடையும் என்பதையும், அங்கே வேலைவாய்ப்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருமுல்லைவாயில், திருச்சி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் பணிகளை அதிவேகமாகத் துரிதப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்த வேலைகளெல்லாம் முடிவடைந்த உடனே, அவை மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஒப்படைக்கப்படும் என்று மாண்புமிகு பேரவை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 349, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.